இப்போது மாற்றத்தைச் செய்திருக்கிறது. 'பொது ஆண்டுக்கு முன், பொது ஆண்டுக்கு பின்' என மாற்றியிருப்பது தவறு. இது மக்கள் மத்தியில் மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. வேதனை அளித்திருக்கிறது. குறிப்பாக, சிறுபான்மையின மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்டவர் அல்ல, நிச்சயமாக நல்ல நடவடிக்கைகளை எடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, இப்பிரச்சினையை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரசு என்றைக்குமே சிறுபான்மையின மக்களைப் பாதுகாக்கின்ற அரசு என்பதை நீங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசைப் பொறுத்தவரையில் 'கி.மு., கி.பி.' என்ற நிலைதான் நீடிக்குமே தவிர வேறு ஒன்றும் நீடிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)*

5. கவன ஈர்ப்பு

(அ) பல்லாவரம் தொகுதி, கீழ்கட்டளையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கான இடத்தினை அங்கு வசிப்பவர்களுக்கு வரன்முறை செய்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லாவரம் தொகுதி, கீழ்கட்டளையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் வசிப்பவர்களுக்கு நிரந்தர வரன்முறை செய்துதர அங்கீகாரம் அளிப்பது" குறித்த அவசரப் பொது முக்கிறத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

2018 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

நண்பகல் 12-00

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

காஞ்சிபுரம் மாவட்டம், கீழ்கட்டளை கிராமத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் "பல்லாவரம் அருகிடைத் திட்டம்" (Pallavaram Neighbourhood Scheme) *செயல்படுத்த புல எண் 297/1 மற்றும் பலவற்றில் 57.91 ஏக்கர் பரப்பளவு நிலங்களைக் கையகப்படுத்த ஏதுவாக, 4(1) அறிவிக்கை அரசாணை (நிலை) எண் 978, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 17-8-1990-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் அரசாணை (நிலை) எண் 1306, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 28-9-1991-ல் 57.82 ஏக்கர் பரப்பளவு நிலத்திற்கு நில எடுப்பு 6-ன்கீழ் வரைவு விளம்பல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.*

2. தனி வட்டாட்சியர் (நில எடுப்பு)/அலகு V *அவர்களால் 30-9-1993 அன்று (தீர்வாணம் எண் 2/93) தீர்வாணம் பகரப்பட்ட 56.57 ஏக்கர் நிலங்களில் 17.10 ஏக்கர் நிலங்கள் மட்டும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 39.47 ஏக்கர் நிலங்கள் தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் மற்றும் ஆக்கிரமிப்புகள் உள்ளதால் நில எடுப்பு அலுவலரால் வாரியத்திடம் ஒப்படைப்பு செய்யப்படவில்லை. வாரியத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்ட 17.10 ஏக்கர் நிலத்தில் 10.55 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளது. மீதமுள்ள 6.55 ஏக்கர் நிலம் மட்டுமே திட்டத்தைச் செயல்படுத்த ஏதுவாக காலியாக உள்ளது.*

3. மேற்கண்ட 6.55 ஏக்கர் நிலப் பரப்பளவு போக மீதமுள்ள 50.02 ஏக்கர் நிலங்கள், நீதிமன்ற வழக்குகள் மற்றும் ஆக்கிரமிப்பு காரணங்களால் திட்டத்தைச் செயல்படுத்த முடியாத நிலை உள்ளது. இந்நிலங்களுக்கு ரூ.95.00 இலட்சம் வாரியத்தால்

செலவிடப்பட்டுள்ளது. இந்நிலங்களில், நீதிமன்ற வழக்குகளைக் காரணமாக வைத்து, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ளாட்சியின் அனுமதியின்றி வீடுகள் கட்டி மின்சாரம், குடிநீர் ஆகிய இணைப்புகளைப் பெற்று பொதுமக்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் வாரியத்தால் திட்டத்தை செயல்படுத்த இயலவில்லை.

4. ஆகவே, மேற்படி ஆக்கிரமிப்பு நிலங்களை வரன்முறைப்படுத்த ஏதுவாக, வாரியம் தனது 30-4-2012 நாளிட்ட தீர்மான எண் 8.10-ல் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஏதுவாக காலியாக உள்ள நிலங்களில் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான பணிகளைத் தொடங்கவும், நீதிமன்ற வழக்கிற்கு உட்பட்ட நிலங்களில் உயர் நீதிமன்ற இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கவும், ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு வாரியத்தால் செலவு செய்யப்பட்ட தீர்வாண தொகைக்கு கூட்டு வட்டியின் அடிப்படையில் இருமடங்காக நிர்ணயம் செய்து ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து வசூலித்து, ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்யலாம் எனத் தீர்மானம் நிறைவேற்றி, அவ்வண்ணமே அரசின் ஒப்புதலுக்காக வரப்பெற்றுள்ளது.

5. உச்ச நீதிமன்றம் Civil Appeal எண் 3148 மற்றும் 3149-ல் தனது 29-1-2010 நாளிட்ட ஆணையில் பொது உபயோகத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலமானது அத்திட்டத்தைத் செயல்படுத்தும் முகமையிடம் ஒப்படைத்திருக்கும்பட்சத்தில் பிரிவு 48B-ன்படி அந்நிலத்தின் நில உரிமையாளரிடம் திருப்பி ஒப்படைக்க இயலாது எனவும், பொது உபயோகத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்தினைத் திரும்பி அளிக்கும்படி அரசினை நிர்ப்பந்திக்கக் கூடாது எனவும் ஆணையிட்டுள்ளது.

6. மேலும், மாநில அரசின் தலைமை வழக்கறிஞர் அவர்கள் 5-10-2017 ஆம் நாளிட்ட கருத்தில், கையகப்படுத்தப்பட்ட அரசு நிலங்களில் சட்டத்திற்கு முரணாக ஆக்கிரமித்து வசித்து வரும் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு அவர்கள் ஆக்கிரமித்த பகுதியினை வரன்முறைப்படுத்தி அளிக்க இயலாது எனவும், அவ்வாறு சட்டத்திற்கு முரணாக ஆக்கிரமித்து வசித்துவரும் ஆக்கிரமிப்புதாரர்களை உடனடியாக வெளியேற்ற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2018 ஜுன் 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

7. அரசு, சீரிய பரிசீலனைக்குப்பின் தீர்வாணம் அளிக்கப்படாத நேர்வுகளில் நிலம் கையகப்படுத்தியதை இரத்து செய்யலாம் எனவும், நிலம் கையகப்படுத்தப்பட்டு வாரியம் வசமுள்ள நிலத்தில் புதிய சர்வே நடத்தப்படும் எனவும், தலைமை வழக்கறிஞர் கருத்து தெரிவித்தபடி சட்டத்திற்கு முரணான ஆக்கிரமிப்புதாரர்களின் நிலை குறித்து பரிசீலனை செய்து வருகிறது. மேலும், இத்திட்டப் பகுதியைப் பொறுத்தவரை, மேற்கண்ட நிலத்தின் தற்போதைய நிலை, ஆக்கிரமிப்புகள் குறித்த கூடுதல் விவரங்கள் அடிப்படையில் பரிசீலனை செய்து இறுதி ஆணை அரசால் பிறப்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், கீழ்கட்டளை, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியிலே அமையப்பெற்ற 1990 ஆம் ஆண்டு சர்வே எண் 271/1-ல் 56.57 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியது. அப்படிக் கையகப்படுத்தியதில் சரியான விதிமுறைகள் அப்போது பின்பற்றப்படவில்லை என்று உயர் நீதிமன்றம் வீட்டு வசதி வாரியத்திற்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியது.

அதன்படி மீண்டும் வீட்டு வசதி வாரியத்தால் 2011 ஆம் ஆண்டில் Appeal செய்யப்பட்டது. உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து நிலுவையில் இருந்துகொண்டிருந்தன. ஆகவே, அந்தப் பகுதியைப் பொறுத்தமட்டில், சுமார் 1,500 முதல் 2,000 வீடுகள் இதுவரையிலும் 40 ஏக்கரில் கட்டப்பட்டுள்ளன. இதுவரையிலும் பத்திரப் பதிவு அலுவலகத்திலே பதிவு செய்யப்படவில்லை. அவர்களுக்குண்டான பட்டாக்கள் வழங்கப்படவில்லை. ஆனால், நகராட்சியின் மூலமாகக் குடிநீர் வசதியும், மின்சார வசதியும் அந்த வீடுகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. அவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திலே 17.15 ஏக்கர் நிலம் போக மீதமுள்ள சுமார் 39 ஏக்கர் இடத்திற்குமேல் இன்று அந்தப் பகுதியிலே நிலுவையில் உள்ளது. அதிலே சுமார் 11 ஏக்கர் வரை சில சமூக விரோதிகள் ஆக்கிரமித்திருப்பதாக இந்த அறிக்கையில் நான் படித்துப் பார்த்தேன்.

அதுமட்டுமல்ல, அங்கு 6 ஏக்கர் நிலம் மட்டுமே திட்டத்தைச் செயல்படுத்த காலியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

[திரு. இ. கருணாநிதி] [2018 ஜூன் 29

அந்த 6 ஏக்கர் நிலத்தில் வீட்டு வசதித் துறை என்ன செய்யப் போகிறது என்று தெரியவில்லை. அதேபோன்று, 11 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்தவர்களிடமிருந்து மீண்டும் அந்த இடத்தைக் கைப்பற்றி அந்த இடத்தில் இருக்கிறவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தரப்படுமா? அதுமட்டுமல்லாமல், 1,500 வீடுகளுக்குமேல் உள்ள அந்தப் பகுதி மக்களுக்கு இதுவரை எந்தவிதமான வசதியும் இல்லாத காரணத்தினால், அந்த இடத்திற்குப் பட்டா வழங்கப்படுமா? அந்த இடத்திற்கு அரசாங்கம் என்ன விலை நிர்ணயம் செய்கின்றதோ அதைக் கட்டுவதற்கு அங்கு குடியிருக்கின்ற மக்கள் தயாராக இருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, சுருக்கமாக ஒரு கேள்வியைக் கேளுங்கள். அடுத்த கேள்வியும் கேட்கலாம்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, அரசு அந்த இடத்திற்கு ஒரு விலையை நிர்ணயம் செய்தால் நிச்சயமாக அவர்கள் அந்தப் பணத்தைத் தருவார்கள். இந்தப் பிரச்சினை 27 ஆண்டு காலம் நிலுவையில் உள்ளது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இந்தத் துறை உள்ளதால், நல்ல தீர்வை அறிவிப்பாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லாவரம் அருகிடைத் திட்டம்" என்பது சென்னைக்கு அருகிலுள்ள புறநகர்ப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய குடியிருப்புகள் மற்றும் மனைகள் ஏற்படுத்துவதாகும். அப்பகுதிகள் வளர்ச்சியடையும் வகையிலும், பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும் உயர் வருவாய்ப் பிரிவு, நடுத்தர வருவாய்ப் பிரிவு, குறைந்த வருவாய்ப் பிரிவு மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து, ஒதுக்கீடு செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

2018 ஜூன் 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அந்தத் திட்டத்தின்படிதான் காஞ்சிபுரம் மாவட்டம், கீழ்கட்டளை கிராமத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் "பல்லாவரம் அருகிடைத் திட்டம்" (Pallavaram Neighbourhood Scheme) *செயல்படுத்த புல எண் 297/1 மற்றும் பலவற்றில் 57.91 ஏக்கர் பரப்பளவு நிலங்களைக் கையகப்படுத்த ஏதுவாக, 4(1) அறிவிக்கை, அரசாணை (நிலை) எண் 978, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 17-8-1990-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், அரசாணை (நிலை) எண் 1306, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 28-9-1991-ல் 57.82 ஏக்கர் பரப்பளவு நிலத்திற்கு நில எடுப்பு 6-ன்கீழ் வரைவு விளம்பல் ஒப்புதல் வழங்கப்பட்டது.*

இந்தச் சூழ்நிலையில், அங்கு இருக்கின்ற பெரும்பகுதியான நிலங்களை, கிட்டத்தட்ட 57.91 ஏக்கர் பரப்பளவு நிலங்களைக் கையகப்படுத்த வேண்டும். ஆனால், 4(1) Notification *செய்யப்பட்ட நிலத்தில் கிட்டத்தட்ட 56.95 ஏக்கர் நிலங்கள் போக, பாக்கியிருக்கின்ற நிலங்கள் அனைத்துமே ஆக்கிரமிப்பாளர்கள் கையிலும், பல்வேறு இடர்களிலும் இருக்கின்றன. ஏற்கெனவே நிலம் கொடுத்த நில உரிமையாளர்களின் வழக்குகள் நிலுவை இருக்கின்ற காரணத்தினால், முழுமையாக அந்த நிலங்களை எடுக்க முடியவில்லை. மீதமிருக்கின்ற 5.95 ஏக்கர் நிலங்கள் காலியாக இருக்கின்றன. எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இருக்கின்ற இடத்தில் பல்லாவரம் அருகிடைத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு வாரியத்தின் சார்பாக முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10.55 ஏக்கர் நிலத்தை உடனடியாக அகற்ற வேண்டுமென்று 5-10-2017 அன்று உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ளார். ஆகவே, அதன் அடிப்படையில் இந்த அரசு நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வழக்குகளை உடனடியாக வேகப்படுத்தி, 17 ஏக்கர் நிலத்தையும் வீட்டு வசதி வாரியம் வசம் எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை*

எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 39.5 ஏக்கர் நிலத்திலுள்ள வீடுகளில் வசிப்பவர்களுக்கும் பட்டா, நிரந்தரமாக பத்திரப் பதிவுகளை செய்வதற்குண்டான உரிமைகள் தொடர்பாக பரிசீலனை செய்து, இந்த அரசு பெற்றுத்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு நல்ல தீர்வு காண்பார் என்றும் நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு செய்த நிலங்களில் ஏற்கெனவே வீடுகள் கட்டிய மக்களுக்கு, அந்த நிலங்களை ஒப்படைக்கக் கூடாது என்று சமீபத்தில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்றது. அவர்களுக்கே அந்த வீடுகளை வழங்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தப் பிரச்சினைகளும் இல்லாத அந்த 6.55 ஏக்கர் நிலத்தில் மட்டும்தான் அருகிடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற நிலங்கள் அனைத்தும் பல்வேறு பிரச்சினைகளுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகள் குறித்து அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. முதலில் 18 வழக்குகளும், அதற்குப்பிறகு 27 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகள் குறித்து வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக தீவிரமாக பரிசீலனை செய்யப்பட்டு, வழக்குகளை வேகப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, வாதாடிக் கொண்டிருக்கிறோம். அந்த வழக்குகள் முடிவடைகின்ற சூழ்நிலையில் இல்லை. ஏனென்றால் அவை 27 வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வழக்குகள் ஆகும். ஆகவே, அந்த வழக்குகள் முடிவடைகின்றபோது, வழக்குகளினுடைய தீர்ப்பின் அடிப்படையிலும், மீதியிருக்கிற நிலம் வீட்டு வசதி வாரியத்தின் வசம் வந்தால், அந்த நிலங்களிலும் அருகிடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இப்போது கைவசம் இருக்கும் நிலங்களுக்கு மட்டுமே அருகிடைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.